செ.வெ.எண்: 15 நாள்: 07.08.2021

**நாகப்பட்டினம் மாவட்டம் அக்கரைப்பேட்டை ஊராட்சியில் ரூ.7,20,92,000/- மதிப்பீட்டில் 670 நபர்களுக்கு விலையில்லா வீட்டுமனைப்பட்டாவை நாகப்பட்டினம் மாவட்ட ஆட்சித் தலைவர் மருத்துவர்.அ.அருண்தம்புராஜ் இ.ஆ.ப., அவர்கள் வழங்கினார்.**

நாகப்பட்டினம் மாவட்டம் அக்கரைப்பேட்டை ஊராட்சியில் ரூ.7,20,92,000/- மதிப்பீட்டில் 670 நபர்களுக்கு விலையில்லா வீட்டுமனைப் பட்டாவை நாகப்பட்டினம் மாவட்ட ஆட்சித் தலைவர் மருத்துவர்.அ.அருண்தம்புராஜ் இ.ஆ.ப., அவர்கள் வழங்கினார்.

நாகப்பட்டினம் வட்டம், அக்கரைப்பேட்டையில் 2004-ஆம் ஆண்டு சுனாமி என்னும் இயற்கை பேரிடரில் பாதிக்கபட்ட மக்களுக்கு தொண்டு நிறுவனங்கள் மூலம் ஏற்கனவே கட்டிக்கொடுக்கப்பட்டுள்ள கான்கிரீட் வீடுகளில் குடியிருக்கும் 670 நபர்களுக்கு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறை அரசாணையின்படி இன்று அக்கரைப்பேட்டையில் மாவட்ட ஆட்சித் தலைவர் மருத்துவர்.அ.அருண்தம்புராஜ் இ.ஆ.ப., அவர்கள் விலையில்லா வீட்டுமனை பட்டாவை வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் கீழ்வேளுர் சட்டமன்ற உறுப்பினர் திரு.வி.பி.மாலி, மாவட்ட வருவாய் அலுவலர் திருமதி.வி.சகிலா, வருவாய் கோட்டாட்சியர் திரு.மணிவேலன், அக்கரைப்பேட்டை ஊராட்சி மன்றத் தலைவர் திருமதி.அறியாநிதி மனோகரன், வட்டாட்சியர் ஜெயபால் மற்றும் அரசு அலுவலர்கள் கலந்துக் கொண்டனர்.

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், நாகப்பட்டினம்.**